செய்தி வெளியீடு எண்.95

நாள்.27.10.2020

# பத்திரிக்கை செய்தி

சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு புதிதாக தொடங்கியுள்ள, விரிவான தேசிய ஒருங்கிணைந்த தரவு தளம் மூலம் சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து வகைப்படுத்தப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்படாத சுற்றுலா தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் தங்களின் விடுதிகளின் விவரங்களை WWW.NIDHI.NIC.IN மற்றும் WWW.SAATHI.QCIN.ORG ஆகிய வலைதளங்களில் பதிவு செய்திட அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், "SAATHI" என்கிற இணையதளத்தில் பதிவு செய்யும் விடுதி உரிமையாளர்களுக்கு சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு சுய சான்றிதழ் வழங்கவுள்ளது. இந்த நற்சான்று மூலம், தங்களின் வணிகத்தை வெகுவாக உயர்த்திக் கொள்ள முடியும். மேலும், சுற்றுலா அமைச்சகம், இந்திய அரசு வழங்கும் பயிற்சிகளில் தங்களின் விடுதி பணியாளர்களை பங்கு பெறச்செய்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு பதிவேற்றம் செய்யும் விவரங்களை tochn2@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, சென்னை மாவட்டத்திலுள்ள அனைத்து தங்கும் விடுதி உரிமையாளர்கள், இதில் பதிவு செய்து பயன்பெற சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு சுற்றுலா அலுவலர், சுற்றுலா அலுவலகம், தமிழ்நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா சாலை, சென்னை – 2 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி எண். 044– 25333358 மின்னஞ்சல். tochn2@gmail.com

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி., இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01

Scanned with CamScanner